# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, மே மாதம் 04 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2012 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டம்*

[*2012 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது*.]

*ச.வ.ஓ- 41/2010*

## 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதிக் கல்லூரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2008 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, சட்டத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதிக் கல்லூரிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கம் செய்வதன் மூலமும் ;

(2) அதன் (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளை (3) ஆம், (4)ஆம் உட்பிரிவுகளாக மீளவிலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரு வதனை இடுவதன் மூலமும் :-

''ஒழுக்காற்றுக் கோவையும் அதன் பிரயோகமும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*''பணியாட் தொகுதிக் கல்லூரியின் நிரந்தரப் பணியாட்*

17அ. (1) பணியாட்தொகுதிக் கல்லூரியின் நிரந்தர பணியாட்தொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பணியாட்தொகுதிக் கல்லூரியின் ஏவுநரால் அல்லது அதன்பொருட்டு ஏவுநரால்

*தொகுதியும் குடியியல் பணியாட் தொகுதி யினதும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு.*

அதிகாரமளிக்கப்பட்ட பணியாட்தொகுதிக் கல்லூரியின் வேறு எவரேனும் அலுவலரால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணியாட்தொகுதிக் கல்லூரியின் குடியியல் பணியாட்தொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சபையால் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்து ரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க பணி யாட்தொகுதிக் கல்லூரியின் ஏவுநரால் பிரயோ கிக்கப்படுதல் வேண்டும்.

(3) குடியியல் நிர்வாக அலுவலர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் பகிரங்க சேவையிலான நியமனங்களுக்கு ஏற்புடைத்தாக வேண்டிய வாறான அத்தகைய நடவடிக்கை முறைகளுக் கிணங்க நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஆளின் நியமனம் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட வொரு காலப்பகுதிக்கு ஆதல் வேண்டும். குடியியல் நிர்வாக அலுவலர் குடியியல் பணியாட்தொகுதி யின் முறையான நிர்வாகத்திற்கு ஏவுநருக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) சபை தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். இவர் இலங்கை கணக்காளர்கள் சேவையைச் சேர்ந்த ஆளொருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பணியாட்தொகுதிக் கல்லூரியின் கணக்குகளின் கணக்காய்வுக்கென ஏவுநருக்கு பொறுப்புடையவராதலும் வேண்டும். பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பணியாட்தொகுதிக் கல்லூரியின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம இத்தால் திருத்தப்படுகின்றது.

''(2) பணியாட்தொகுதி கல்லூரியின் கணக்காளர், சபையால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கணக்காளர் இலங்கைக் கணக்காளர்கள் சேவையைச் சேர்ந்தவராதலும் வேண்டும். கணக்காளர் பணியாட்தொகுதிக் கல்லூரியின் மதிப்பீடுகளையும் நிர்வாகம் தொடர்பிலான நிதி சார்ந்த எல்லாக் கருமங்களையும் தயாரிப்பதற்கென ஏவுநருக்கு பொறுப்புடையவராதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு அதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக் கத்தின் 25அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*''பணியாட் தொகுதிக் கல்லூரியின் குடியியல் பணியாட் தொகுதிக்கு நியமனம்.*

25அ. (1) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அந்த அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழு வின் தவிசாளரினதும் சம்மதத்துடன் பேரவை யால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு கல்லூரியின் பணியாட்தொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட் தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பணியாட்தொகுதிக்கு கல்லூரியின் பணியாட் தொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்த கைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பணியாட்தொகுதிக் கல்லூரியின் பணியாட்தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பணியாட்தொகுதிக் கல்லூரி குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்கு சேவையாற்ற உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ள ஆளொருவரைத் தொழிலுக்கமர்த்துமிடத்து அவ்வாளினால் பணியாட்தொகுதிக் கல்லூரிக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி அத்தகைய ஒப்பந்தத்தின்கீழ் அவ்வாளின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின்பேரில் உள்ளூராட்சி மன்ற சேவையின் உறுப்பினர் ஒருவர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் எவரேனும் அலுவலர் அந்த உறுப்பினரின், அலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடன் பணியாட்தொகுதிக் கல்லூரியால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பணியாட்தொகுதிக் கல்லூரியின் பணியாட்தொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் உட்பட பணியாட்தொகுதிக் கல்லூரியாலும் விடயத்திற்கேற்ப உள்ளூராட்சி சேவை மதியுரைக் குழுவாலும் அல்லது உள்ளூரதிகார சபையாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது அத்தகைய பணியாட் தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) ஆளொருவர் இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் பணியாட்தொகுதிக் கல்லூரியின் பணியாட்தொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப் படுமிடத்து அவ்வாள் பணியாட்தொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.".

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்